1981 மார்ச் 24]

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டியிலேயிருந்து மேடவாக்கம் வரையில் பல்வேறு தொழிற்கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பாதையில் அதிகமான போக்குவரத்து இருக்கிறது. அந்தப் பாதையை அகலப்படுத்தாத காரணத்தால் போக்குவரத்தில் அடிக்கடி தடங்கல் ஏற்படுகிறது. அதனால் ஆக்சிடென்ட் ஏற்பட்டு விட்டால் நீண்ட நேரம் போக்குவரத்திற்கே இடைஞ்சல் ஏற்பட்டு வருகிறது. அதை அகலப்படுத்த முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். அதோடு, மேடவாக்கத்திலிருந்து ஒட்டியம்பாக்கம் வரை உள்ள ரோட்டைச் சீர்படுத்த முன் வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, குறுகலான சாலைகளையெல்லாம் விரிவுபடுத்துவதற்காகவும், இருபுறத்திலும் விரிவுபடுத்தி நடைபாதைகளை அமைப்பதற்காகவும் ஏறத்தாழ 1,78,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மணிமுத்தா நதியில் தரைப்பாலம்.

*வினா எண் 462—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் எறுமனூருக்கு அருகில் மணிமுத்தா நதியில் தரைப்பாலம் அமைத்து போக்குவரத்து வசதியற்ற அப்பகுதியில் உள்ள பத்து கிராமங்களை விருத்தாசலத்துடன் தொடர்பு கொள்ள உதவ வேண்டுமென்று மக்களிடமிருந்து விண்ணப்பம் அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(ஆ) ஆம் என்றால் தரைப்பாலம் அமைத்து கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தனியாருக்குச் சொந்தமான சந்தைகளை அரசுடைமையாக்குதல்.

*வினா எண் 463—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சி மற்றும் பேருராட்சி எல்லைக்குள் இருக்கும் தனியார்க்குச் சொந்தமான சந்தைகளை அரசுடைமையாக்கி